TAMILTH Kancheepuram 1 Regional_04 215614 13793548

சென்னையில் உள்ள ஆர்மீனியன் தெரு, அரண்மனைக்காரன் தெரு என்றும் அழைக்கப்படுகிறது. வடக்கில் மண்ணடியையும் தெற்கில் சைனா பஜாரையும் இணைக்கும் இத்தெரு 1750-களில் குடியேறிய அர்மீனியர்களின் பெயரால் அழைக்கப்படுகிறது.

நவாப் கான் பகதூர் சர் முகமது ஹபிபுல்லா சென்னை மாகாண ஆளுநரின் நிர்வாகக் குழு உறுப்பினராகவும் திருவாங்கூர் சமஸ்தானத்தின் திவானாகவும் பணியாற்றியவர். சென்னை தி.நகரின் பிரதான சாலை ஒன்று இவரின் பெயரைத் தாங்கியுள்ளது.

பள்ளிக்கரணை உட்பட தமிழகம் முழுவதும் உள்ள சதுப்பு நிலங்கள்

செயற்கைக்கோள் உதவியுடன் துல்லியமாக அளவீடு

பணிகள் முடிவடைந்துவிட்டதாக உயர் நீதிமன்றத்தில் அரசு தகவல்

■ சென்னை

பள்ளிக்கரணை உட்பட தமிழகம் முழுவதும் உள்ள சதுப்பு நிலங்களை செயற்கைக் கோள் உதவியுடன் துல்லியமாக அளவிடும் பணிகள் முடிவடைந்து, உறுதிப்படுத்தும் பணிகள் நடந்து வருவதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து இது தொடர்பான வழக்கு விசாரணையை உயர் நீதிமன்றம் ஜனவரி மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளது.

சென்னை பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தில் பன்னடுக்கு குடியிருப்பு வளாகம் கட்ட அனுமதியளித்த உத்தரவை ரத்து செய்யக் கோரியும், பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தைச் சுற்றி சுமார் ஒரு கி.மீ, தொலைவுக்கு எந்த கட்டுமான பணிகளுக்கும் அனுமதி வழங்கக்கூடாது எனக் கோரியும் உயர் நீதிமன்றத்தில் அதிமுக வழக்கறிஞரான ஜெ.பிரிஸ்னெவ் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை ஏற்கெனவே விசாரித்த உயர் நீதிமன்றம், பள்ளிக்கரணை சதுப்பு நிலப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் உள்ளிட்ட எந்த கட்டுமானப் பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது என இடைக்கால தடை விதித்துள்ளது.

இந்நிலையில், இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் ஆஜராகி, "உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி பள்ளிக்கரணை உட்பட தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சதுப்பு நிலங்களை செயற்கைக் கோள் உதவியுடன் துல்லியமாக அளவிடும் பணிகள் முடிவடைந்து, அவற்றை உறுதி செய்வதற்காக அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் கோப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கை கிடைத்ததும் இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் விரிவான அறிக்கை தாக்கல் செய்யப்படும்" என்றார்.

அப்போது தமிழக அரசின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், "மனுதாரர் கூறியுள்ளதுபோல பள்ளிக்கரணையை சுற்றியுள்ள ஒரு கி.மீ. சுற்றளவும் சதுப்பு நிலமாக இருந்திருந்தால் ஓஎம்ஆர் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளில் எந்தவொரு வளர்ச்சிப் பணிகளும் நடைபெற்று இருக்காது" என்றார்.

அதையடுத்து நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜனவரி இறுதிக்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளனர்.

கோயம்பேடு மேம்பாலத்தின் கீழே உள்ள ரவுண்டானா பகுதியில் சிஎம்டிஏ சார்பில் பசுமைப் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு ஒரு பகுதியில் குழந்தைகள் விளையாடுவதற்கு ஏற்ற வசதிகளும் மற்றொரு பகுதியில் யோகா மையம், 8 வடிவ நடைபாதை, நடைபயிற்சி பாதை, 50 பேர் வரை அமரும் அரங்கம் என்று பல்வேறு வசதிகளும் செய்யப்பட்டு பணிகள் முடிந்து பூங்கா திறக்கப்பட்டாலும் போதிய வரவேற்பு இன்றி காணப்படுகிறது. படம்: ம.பிரபு

நுகர்பொருள் வாணிபக் கழக தேர்தலில்

திமுக ஆதரவு சங்கம் வெற்றி

■ சென்னை

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் பணியாற்றும் சுமார் 14 ஆயிரம் தொழிலாளர்களின் நலனுக்காக, பல்வேறு தொழிற்சங்கங்கள் இயங்குகின்றன. இந்த தொழிற்சங்கத்தினர் தங்கள் கோரிக்கைகளுக்காக நிர்வாகத்தோடு பேசுவதற்கு அங்கீகாரம் பெறவேண்டும் என்பதால் தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல் நடத்தப்படுவது வழக்கம்.

அதன்படி கடந்த 2009-ம் ஆண்டு தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல் நடைபெற்றது. அதன்பிறகு, தேர்தல் நடைபெறவில்லை.

இந்நிலையில், உயர் நீதிமன்ற உத்தரவுப்படி, மீண்டும் தேர்தல் நடத்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் முடிவு செய்தது. அதன்படி, தமிழகத்தில் 51 வாக்குச் சாவடிகளில் தொழிற்சங்க அங்கீகாரத் தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இத்தேர்தலில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அனைத்து தொழிலாளர் முன்னேற்ற சங்கம், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பாரதீய தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் (தொமுச), தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பணியாளர்கள் சங்கம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அண்ணா தொழிற்சங்கம் உட்பட 8 சங்கங்கள் போட்டியிட்டன.

இத்தேர்தலில் 13,018 வாக்குகள் பதிவாகி இருந்தன. இவற்றில் செல்லாத 109 வாக்குகளை தவிர்த்து, 12,909 வாக்குகள் எண்ணப்பட்டன. இதில் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எம்ப்ளாயீஸ் யூனியன் (தொமுச) 6,699 வாக்குகள் (51.5 சதவீதம்) பெற்று வெற்றி பெற்றது. இதன்மூலம் இச்சங்கம் அங்கீகாரம் பெற்ற சங்கமாக தேர்வாகி உள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அண்ணா தொழிற்சங்கம் 2,041 வாக்குகள் (15.7 சதவீதம்) பெற்று 2-வது இடமும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அனைத்து தொழிலாளர் முன்னேற்ற கழகம் 1,627 வாக்குகள் (12.5 சதவீதம்) பெற்று 3-வது இடமும் பெற்றன.

திரைப்படத் தயாரிப்பாளருக்கு எதிரான

அமலாக்கத் துறை நடவடிக்கைக்கு விதித்த தடையை நீக்க உயர் நீதிமன்றம் மறுப்பு

■ சென்னை

திரைப்படத் தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரனுக்கு எதிரான அமலாக்கத் துறையின் நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை நீக்க முடியாது என உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு மறுப்பு தெரிவித்துள்ளது.

டாஸ்மாக் முறைகேடு தொடர்பாக அமலாக்கத் துறை அதிகாரிகள் திரைப்படத் தயாரிப்பாளரான ஆகாஷ் பாஸ்கரன் மற்றும் தொழிலதிபர் விக்ரம் ரவீந்திரன் ஆகியோரது வீடுகள், அலுவலகங்களில் சோதனை நடத்தி ஆவணங்களை பறிமுதல் செய்தனர். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அவர்களிடம் பறிமுதல் செய்த பொருட்களை திருப்பி வழங்க உத்தரவிட்டதுடன், அமலாக்கத் துறையின் மேல்நடவடிக்கைக்கும் இடைக்காலத் தடை விதித்துள்ளது. அதன் பின்னர், அமலாக்கத் துறை தரப்பில் தனக்கு மீண்டும் சம்மன் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக ஆகாஷ் பாஸ்கரன் தொடர்ந்த வழக்கில், அமலாக்கத்துறை உதவி இயக்குநர் வரும் டிச.15-ம் தேதி ஆஜராக உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், ஆகாஷ் பாஸ்கரன், விக்ரம் ரவீந்திரன் தரப்பில் தொடரப்பட்ட வழக்குகள் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள் முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது அமலாக்கத் துறை தரப்பில் ஆஜரான சிறப்பு அரசு வழக்கறிஞர் என்.ரமேஷ், "மனுதாரரான விக்ரம் ரவீந்திரனின் வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை நடத்தி எந்த பொருட்களையும் பறிமுதல் செய்யவில்லை" என்றார். அதையடுத்து விக்ரம் ரவீந்திரன் தாக்கல் செய்திருந்த மனுவை நீதிபதிகள் முடித்து வைத்தனர்.

மேலும் அமலாக்கத் துறை தரப்பில், ஆகாஷ் பாஸ்கரன் மீதான நடவடிக்கைகளுக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை நீக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. அதையேற்க மறுப்பு தெரிவித்த நீதிபதிகள். டாஸ்மாக் முறைகேடு தொடர்பான அமலாக்கத் துறையின் நடவடிக்கைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு நிலுவையில் இருப்பதால் தடையை நீக்க முடியாது எனக்கூறி, வழக்கின் இறுதி விசாரணையை ஜனவரி மாதத்துக்கு தள்ளி வைத்துள்ளனர்.

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த கோரும்

பாமக போராட்டத்தில் பங்கேற்க தவெகவுக்கு அழைப்பு

■ சென்னை

சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வலியுறுத்தி பாமக சார்பில் டிச.17-ம் தேதி அன்புமணி தலைமையில் போராட்டம் நடைபெறுகிறது.

இதில் தவெக பங்கேற்க, அன்புமணி சார்பில் அழைப்பு கடிதத்தை தவெக பொதுச் செயலாளர் ஆனந்த், நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் கே.ஏ.செங்கோட்டையன், இணை பொதுச் செயலாளர் சி.டி.ஆர்.நிர்மல்குமார், தேர்தல் பிரச்சார மேலாண்மை பிரிவு பொதுச் செயலாளர் ஆதவ் அர்ஜுனா, கொள்கை பரப்பு பொதுச் செயலாளர் அருண்ராஜ் ஆகியோரிடம் பாமக வழக்கறிஞர் பாலு வழங்கினார். அப்போது செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

தமிழக அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என வலியுறுத்தி பாமக சார்பில் டிச.17-ம் தேதி சென்னையில் மாபெரும் போராட்டம் நடைபெற இருக்கிறது. இதில் அனைத்து அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், சமூக அக்கறை கொண்ட அமைப்புகள் கலந்துகொள்ள வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி கடிதம் எழுதியிருக்கிறார்.

அந்த வகையில், தவெக-வும் இதில் பங்கேற்க வேண்டும் என்று கட்சியின் முக்கிய நிர்வாகிகளிடம் கடிதம் கொடுக்கப்பட்டது. தவெகவின் முதல் மாநாட்டில் இருந்தே சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த கோரி வருகிறார்கள். எனவே, இந்த போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருக்கிறோம் என்று கூறினார்.

ஆதவ் அர்ஜுனா கூறும்போது, "சமூகநீதி பேசும் திமுக, சாதிவாரி கணக்கெடுப்பு விவகாரத்தில் மத்திய அரசு மீது குற்றச்சாட்டு வைக்கிறது. பாமக கடிதம் குறித்து கட்சித் தலைவரிடம் தெரிவிக்கப்பட்டு கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும்" என்றார்.

கோயம்பேடு மார்க்கெட் காய்கறி, பழங்கள், பூக்கள் இன்றைய விலை நிலவரம் (1 கிலோவுக்கு)

காய்கறிகள்	
பீன்ஸ்	ரூ.45
பீட்ரூட்	ரூ.20
பாகற்காய்	ரூ.40
சுரைக்காய்	ரூ.30
கத்தரிக்காய்	ரூ.10
முட்டை கோஸ்	ரூ.8
கேரட்	ரூ.30
சவ் சவ்	ரூ.10
முருங்கைக்காய்	ரூ.180
இஞ்சி	ரூ.60
பச்சை மிளகாய்	ரூ.30
அவரைக்காய்	ரூ.40
நூக்கல்	ரூ.20
வெண்டைக்காய்	ரூ.30
பெரிய வெங்காயம்	ரூ.18
சாம்பார் வெங்காயம்	ரூ.30
உருளைக்கிழங்கு	ரூ.15
முள்ளங்கி	ரூ.10
கோவைக்காய்	ரூ.30
புடலங்காய்	ரூ.40
நாட்டு தக்காளி	ரூ.22
நவீன் தக்காளி	ரூ.30
கருணைக்கிழங்கு	ரூ.30
பூண்டு	ரூ.110
பழங்கள்	
ஆப்பிள்	ரூ.110
சாத்துக்குடி	ரூ.60
ஆரஞ்சு	ரூ.45
மாதுளை	ரூ.120
கொய்யா	ரூ.28
கற்பூரவள்ளி	ரூ.70
ஏலக்கி	ரூ.65
செவ்வாழை	ரூ.80
நேந்திரம்	ரூ.30
டிராகன் (ஒன்று)	ரூ.25
திராட்சை (கருப்பு)	ரூ.80
அன்னாசி	ரூ.35
பூக்கள்	
சாமந்தி	ரூ.110
மல்லி	ரூ.400
ஜாதிமல்லி	ரூ.550
முல்லை	ரூ.750
ரோஜா	ரூ.120
சம்பங்கி	ரூ.70

தி புரபஷனல் தூதஞ்சல்
THE PROFESSIONAL COURIERS
38 YEARS OF SERVICE - DELIVERIES ACROSS INDIA
Call / Whatsapp : 98846 24020

அரசியல், சமூக அமைப்புகள் தங்களது செய்திகளை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம். மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

YES BANK

யெஸ் பேங்க் லிமிடெட்

பதிவு & கார்ப்பரேட் அலுவலகம்: யெஸ் பேங்க் வீடு, மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை அருகில், சாண்டாகுரூஸ் கிழக்கு, மும்பை-400055.

CIN: L65190MH2003PLC143249, **E-mail:** communications@yesbank.in, **Website:** www.yesbank.in

சுவாதீனம் அறிவிப்பு (அசையா சொத்திற்கான)

கீழே கையொப்பமிட்டுள்ள **யெஸ் பேங்க் லிமிடெட் (வங்கி)**-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி நிதிசொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 **("சட்டம்")** மற்றும் 2002 விதிகள் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2)ன் விதி 9-ன்கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி, கீழ்குறிப்பிட்டுள்ள கோரிக்கை அறிவிப்பு நாள் அன்று கீழ்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கீழ்குறிப்பிட்டுள்ள நிலுவை தொகை மற்றும் அத்துடன் வட்டி, வருங்கால வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர சேர்த்து அறிவிப்பு கிடைத்த **60 நாட்களுக்குள்** செலுத்துமாறு கோரியிருந்தார். கடன்தாரர்/பாதுகாப்பு வழங்குநர்கள் தொகை செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/பாதுகாப்பு வழங்குநர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4)-ன்கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழ்குறிப்பிட்டுள்ள தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார்.

கடன்தாரர்/பாதுகாப்பு வழங்குநர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான அடமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக்கொண்டால் அது வங்கிக்கு செலுத்தப்பட வேண்டிய கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கித் தொகை அத்துடன் வட்டி, கட்டணங்கள், செலவுகள், இதர உட்பட செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(8)-ன்கீழ், விற்பனை அல்லது பரிமாற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்த நேரத்திலும் எங்கள் நிலுவைத் தொகைகள், அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் டெண்டர் செய்யப்பட்டால், பாதுகாக்கப்பட்ட சொத்தை நாங்கள் விற்கவோ அல்லது மாற்றவோ மாட்டோம் மேலும் அந்த பாதுகாக்கப்பட்ட சொத்தை மாற்றவோ அல்லது விற்கவோ நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என்பதை நினைவில் கொள்க.

வ. எண்.	கடன்தாரர்/இணை கடன்தாரர் மற்றும் ஜாமீன்தாரர் பெயர்	கடன் கணக்கு எண்.	அறிவிப்பு தொகை (ரூ.)	13(2)-ன்கீழ் அறிவிப்பு நாள்	சுவாதீனம் நாள்
1	முகேஷ் M, அலுவலகம் முகேஷ் MS Oravel Stays Pvt. Ltd., மற்றும் ஆகாஷ் M, திருமதி. லட்சுமி	AFH000500606628	Rs. 3,078,134.00 /- as on 24.11.2025	21-01-2025	10.12.2025

அடமான சொத்தின் விவரம் : நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மனை எண்.3, அளவுகள் 1350 சதுர அடி பரப்பு மற்றும் அதில் கட்டப்பட்ட கட்டிடம், சர்வே எண்கள். 149/5 மற்றும் 172/1, லேஅவுட் பெயர் "பிரேமாவதி நகர் (a) Dr.A.P.J. அப்துல் கலாம் நகர்", ஒப்புதல் வழங்கியது DTCP No.219 (R)/2018, பழைய எண்.82, புதிய எண்.59, கருநிலம் கிராமம், செங்கல்பட்டு தாலுகா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ளது மற்றும் **எல்லைகள்** வடக்கில் : OSR - 1, தெற்கில் : OSR - 2, கிழக்கில் : காலி நிலம், மேற்கில் : 23 அடி அகல சாலை. அளவுகள் வடக்கில் 50 அடி, தெற்கில் 50 அடி, கிழக்கில் 27 அடி, மேற்கில் 27 அடி.
மேற்குறிப்பிடப்பட்ட சொத்து காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன் மற்றும் கருநிலம் கிராமம் பஞ்சாயத்து எல்லைகள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை 2 சார் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

2	நாகா ரவி தேஜா மேற்பார்வையாளர் Delite Systems Engineering Pvt Ltd மற்றும் விஜயலட்சுமி,	AFH000500725743	Rs. 5,43,130.00/- as on 24.11.2025	28-07-2025	10.12.2025

அடமான சொத்தின் விவரம் : காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், மனை எண். C6C, அளவுகள் 833 சதுர அடி பரப்பு, "விஜயா கார்டன்" என்று அறியப்படும் லேஅவுட் (Layout Approval No. D.T.C.P. Regularization Se.Mu.Na.ka.No. 881/2020/A1, Dated 20.03.2020, வழங்கியது சிறப்பு அதிகாரி, நெல்லிகுப்பம் பஞ்சாயத்து, திருப்போரூர் பஞ்சாயத்து யூனியன், காஞ்சிபுரம் மாவட்டம்) பழைய பட்டா எண். 184, புதிய பட்டா எண்.1305, சர்வே எண்.132-க்குட்பட்ட எண்.100, நெல்லிகுப்பம், திருப்போரூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார் பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது. **எல்லைகள் :** வடக்கில் : 23 அடி சாலை, தெற்கில் : காலி நிலம், கிழக்கில்: மனை எண்கள்C6A மற்றும் C6B, மேற்கில் : மனை எண். C6D. அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்கு வடக்கு பக்கம் : 30 அடி, கிழக்கிலிருந்து மேற்கு தெற்கு பக்கம் : 34 அடி 5 அங்குலம், வடக்கிலிருந்து தெற்கு கிழக்கு பக்கம் : 37 அடி, வடக்கிலிருந்து தெற்கு மேற்கு பக்கம் : 20 அடி 6 அங்குலம். **அளவுகள்** 833 சதுர அடி பரப்பு.

3	ஹரி கிருஷ்ணன் S	AFH000501776957	Rs. 14,39,835.00/- as on 24.11.2025	29-07-2025	10.12.2025

அடமான சொத்தின் விவரம் : காலி நிலம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், மனை எண். 154, அளவுகள் 884 சதுர அடி, சர்வே எண்கள். 8/1C & 8/1D (பட்டாவின்படி புதிய சர்வே எண். 8/1D1A) "மதர் லேண்ட்" என்ற பெயரில் லேஅவுட்டாக மாற்றப்பட்டது, லேஅவுட் ஒப்புதல் வழங்கியது DTCP vide No.158/2023, நாள் 26.07.2023, மற்றும் RERA TN/35/Layout/4142/2023, நாள் 07.11.2023, பாண்டூர் கிராமம், வண்டலூர் தாலுகா, செங்கல்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ளது. **எல்லைகள் :** வடக்கில் : மனை எண்.161, தெற்கில் : 7.2 மீட்டர் சாலை, கிழக்கில் : மனை எண். 153, மேற்கில் : மனை எண்.154, மற்றும் பின்வரும் லீனர் அளவுகள், கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் - 24 அடி 11 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் - 24 அடி 11 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் - 35 அடி 5 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் - 35 அடி 5 அங்குலம். அனைத்து மொத்த அளவுகள் 884 சதுர அடி மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் சார்-பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.

4	அரவிந்த் S & பேபி ஷாலினி	AFH000500736995	Rs. 2,328,557.00/- as on 24.11.2025	17-09-2025	10.12.2025

அடமான சொத்தின் விவரம் : குடியிருப்பு அப்பார்ட்மெண்ட்/யூனிட் கொண்ட எண். A432, பிளாக் A, கார்பேட் ஏரியா 465 சதுர அடி, ஜுபிலி குடியிருப்பு என்று அறியப்படும் குடியிருப்பு அப்பார்ட்மெண்ட் காம்ப்ளக்சில் 4வது தளத்தில், 295322.09 சதுர அடியில் 345.80 சதுர அடி பிரிக்கப்படாத பங்கு நிலம், சர்வே எண்கள். 122/1A. 122/1B, 122/1C, 122/D, 122/1E, 122/1F, 122/1G, 122/1H, 122/2, 122/3, 126/1, 127, 117/D, 117/1E, மற்றும் 117/1F, கயரம்பேடு கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு இணை-2 சார் பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. எல்லைகள் (மொத்த பரப்பு 295322.09 சதுர அடி) - வடக்கில் : ச.எண். 117/1C, 118/18, 122/1A, 122/1B (OSR) மற்றும் 126/4, தெற்கில் : ச.எண். 117/1G,117/2,126/2,127 & 128, கிழக்கில் : ச.எண். 111, 112, 117part, 121part, 122/4, 126/3, 126/4 மற்றும் 127part, மேற்கில் : ச.எண். 22/1F(சாலை), 122/2part (OSR), 123/3(சாலை), 124/1B(சாலை), 125, 126/2 & 128.

இடம் : சென்னை
நாள் : 10.12.2025

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
யெஸ் பேங்க் லிமிடெட்

HDFC BANK
We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎஃசி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை-400 013.

தங்க நகைகளுக்கான ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை. பின்வரும் கணக்குகளில் உள்ள பாக்கித் தொகை முழுவதையும் ஏழு நாட்களுக்குள் செலுத்துமாறும், தவறினால் மேல் அறிவிப்பின்றி, அடமானத்தில் உள்ள கடனுக்கு ஈடான தங்க நகைகள் முழுவதும் ஏலத்தில் விட வங்கிக்கு முழு சுதந்திரம் உண்டு எனக் கடன்தாரர்களுக்கு HDFC அறிவிப்பு ஒன்றையும் அளித்துள்ளது. ஆனாலும், கடன்தாரர்கள் அக்கறையின்றி பாக்கித் தொகைகளை செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, அடமான கடன் ஒப்பந்தத்தின் கீழ், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட தங்க நகைகள் மீது தமக்குரிய உரிமையை செயல்படுத்துவதற்கு, அடமானம் பெற்றவர் என்ற அளவில் ஒப்பந்தத்தின் படி தனது உரிமைகளை செயல்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. அதன்படி, கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் முழுவதையும் ஏலத்தில் விற்று கடன்தாரர்களிடமிருந்து வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏலமானது கீழ்க்கண்ட கிளைகளில் 22.12.2025 தேதியில் மாலை 4.00 மணியளவில் நடத்தப்படும். எந்தவொரு காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் ஏலம் நடைபெறாவிடில் அல்லது குறிப்பிட்ட தேதியில் முடியவில்லை என்றால் அந்த ஏலத்தை எந்தவொரு அடுத்த தேதி மற்றும் நேரத்தில் நடத்த வங்கிக்கு உரிமை உண்டு.

வ. எண்	நகை கடன் எண்	கடன்தாரர்கள் பெயர்	கடன் தொகை	ஏலம் நடைபெறும் இடம் (கிளையின் முகவரி)
1	75192680	அவினாஷ் லூர்தாஸ்	₹ 1,03,500/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.940, பஜார் ரோடு, ராம்நகர் தெற்கு, செங்கல்பட்டு மாவட்டம், மடிப்பாக்கம், சென்னை 600091
2	4000430176	V வினோத் குமார்	₹ 3,98,200/-	HDFC பேங்க் லிமிடெட், சாய் சடன் பில்டிங், எண்.369, காமராஜ் நகர் மெயின் ரோடு, ஆவடி, சென்னை 600071
3	75892042	கார்த்திகேயன் T	₹ 3,32,100/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.53, மனை எண்.B-41, IVவது அவின்யூ, அசோக் நகர், சென்னை 600083
4	75850617	கார்த்திகேயன் T	₹ 4,02,900/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.5 MIG, P T ராஜன் சாலை, கே கே நகர், சென்னை 600078
5	75959685	கார்த்திகேயன் T	₹ 4,38,200/-	
6	4000068551	கிருஷ்ணமூர்த்தி சீனிவாசன்	₹ 1,40,000/-	
7	4000086697	பாலாஜி கண்ணன்	₹ 1,10,000/-	HDFC பேங்க் லிமிடெட், புதிய எண்.105, பழைய எண்.51, லா பிளாசா, G P ரோடு, சென்னை 600002
8	74176153	காந்திகிரன் M	₹ 84,300/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.37, முதல் தளம், ரத வீதி, திருவல்லிக்கேணி, சென்னை 600005
9	4000140176	முகமது ஜான் M	₹ 68,200/-	HDFC பேங்க் லிமிடெட், G 1, பிளாக் C, ராதி ஷ்யாம் அப்பார்ட்மெண்ட், 60 அடி ரோடு, வானகரம், அடையாளம்பட்டு ரோடு, சென்னை-600095
10	74155221	முபினா நான்சி	₹ 1,04,500/-	
11	74567684	முபினா நான்சி	₹ 1,92,000/-	
12	75252633	C ரசாவந்த்	₹ 14,000/-	HDFC பேங்க் லிமிடெட், எண்.27, அனன்யா கிருஷ்ணன் பில்டிங், பன்னீர்செல்வம் சாலை, சிவன் பார்க் எதிரில், கே கே நகர், சென்னை-600078
13	75342737	ப்ரியா முரளி	₹ 5,42,057/-	
14	75359576	லோகநாதன் கந்தசாமி	₹ 2,50,000/-	HDFC பேங்க் லிமிடெட், மனை எண்.A 76, பழைய எண்.15, புதிய எண்.37, 11வது அவின்யூ, அசோக் நகர், சென்னை 600083
15	4000481348	சப்தரிஷி வைத்தியநாதன்	₹ 1,54,500/-	HDFC